உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி ௨௫] அக்ஷய ௵ பங்குனி ௴ [பகுதி ௫
Vol. XXV. March-April-1927. No. 5.

## தமிழும் தமிழரும்.

தமிழர்தாமே புறக்கணித்துப் பொருளாக் கொள்ளாத தமிழ் தற்
காலம் நாகரிகப் பிறமொழியாளரால் எள்ளப்படின் இழுக்காமோ? ‘தற்
செய்யார்,’ தினந் தாழுநிலைமாற்ற ‘அறிவறிந்த ஆள்வினை’ மேவாத்
தமிழரிடைத் தளராது தமிழணங்கு தழைவதெங்ஙன்? உள்ளமிலார்,
உடைமையிலார், ‘வள்ளியமென்னுஞ் செருக்கு’மில்லாத் தமிழ்ப் பெரி
யார்பலர்தா மின்னாட் டம்மிழிவைத் தமிழ்க்கேற்றி அதனழிவு சூழ
கின்றார். அறிவேற்றமடைதற்கும், தமிழ்மொழியே இடையூறென்
றியம்புகின்றார். மேனாட்டார் பயின்றுவரும் பௌதிகநற்பல்கலையும்,
இறைமைநலத்துறைவகையும் தமிழ்மொழியாற் பெறவொண்ணாவெனப்
பேசுகின்றார். இந்திய ரோரினக்குடிமையுணர்வுற்று, ஒற்றுமைபெற்
றுயர்தற்குத் தமிழ்வளர்த்தல் தடையெனவும் முழங்குகின்றார். மடி
மடிமேல்வளர் தமிழர் மயக்கத்தால் தம்முன்னோர் குன்றாதகுடிவிளக்க
மறந்து, தங்கள் அடிமைநிலைத்தளர்வாற் றம்மூரமற்றாழ்ந் துறங்குபவர்
தமக்கிரங்காத அவர்கூற்றைப் பொருட்படுத்திற் றவறாமன்றோ?

‘குமரிமுதற் பனிவரைமட்டுறுபவர்கள் ஒருமொழிகொண்டன்றி
ஒன்றார்’ என்பதற்கு நியாயமுண்டோ? பலமொழிகள் நிலவு தனிப்
பெருநாடுபல உலகில் ஒருமையுடன் பெருமையுமுற்று உயரக் காண்
போம். ஐக்கியமாகாணங்கள் என்னும் அழகிய பெயர்படைத்து நாகரிக
வுலகத்திலையகமாய்த் தலைநிற்குந் தனியரசில், பலமொழிகளுடையாரே
குடிமையாள்வார். மேலைப் புத்துலகத்தின் வடதலையிற் கானடாநன்
னாட்டினிலும், ஆங்கிலமும் பறங்கியுமென் றிருமொழியும் மருவிவளர்ந்
திலங்கக்காண்போம். வானவர்நாடெனவழங்குஞ் சீனர் பழம்பெரு
நாட்டில் தொன்றுதொட் டின்றளவும் பல்வேறு நல்மொழிகள் பயிலு
கின்றார். இன்னபெருநாடனைத்தும், நிலப்பரப்புங் குடிப்பெருக்கும்
இந்தியநாடதற் கெனைத்துங் குறையாமை கொண்டுடையவேனும்,
ஒற்றுமைநல்லுணர்வுநிதி பலவேறுமொழிபயில்வார் நிதம் வளர்க்க
வளம்பெருகிச்செழுமைசெறி செருக்குடனே நிலவக்காண்போம். எனவே
ஒருமையாசயர்வுக்குத் தமிழாட்சி இந்நாட்டில் தடைதாற்குநியாயமில்லை.

இனி, மேனாட்டிற் பௌதிகமும் புதுக்கலைகள் பலவும் எழுந்துலவு முன்னர் நிலவிநின்ற மொழிகளை அம்மொழியுடையார் புத்தறிவுப்பெரு நறவுக்குதவாத கலன்களெனப் புறக்கணித்துப் புதுமொழிகள் தேடியவர் வளர்க்கவில்லை. அறிவுரிமைக்கு உறைவிடமாய்க்கருதிவரு மிக்கால ஆங்கிலமும் ஜருமனியம் பறங்கியெனும் பாஷைகளும், புதுக்கலையும் புத்தறிவும் வளர்ந்தவற்றை வளஞ்செயுமுன், இலக்கணமும் இலக்கியமுமில்லாத இளஞ்சிறிய குழவிமொழிநிலையி னெடுங்காலம் அவை நிலவியுளவாம். புத்தறிவை நத்திய அம்மொழியுடையார் தம்மொழியி லறிவுதரும் புதுக்கலைகள் புகுத்தி நலம்படைத்ததல்லால், குறைமொழிமேற் கூறிவைத்துத் தம்மிழிவுபேணு பழிபூண்டாரில்லை. அவர்மொழி போலல்லாமல், அறிவெட்டாத் தொல்லரிய பழமையொடு ஆக்கவளம் பெற்றிலங்குந் தமிழினிலே புதுக்கலைகள் தவழ்ந்திலகி வீறுபெறத் தமிழ்நலமுங் கலைவளமு மொருங்கோங்குந் தகையவாகும். ஓர்ந்துணராரிதை மறுப்பர்: உண்மையிஃதே.

நாட்டினலம் வளர்ப்பதற்கு நாட்டினரெவ்வகுப்பினரும் உயர்தல் வேண்டும். மொழிவளப்பமில்லார்பால் அறிவாக்கம் உயர்வதில்லை. அகன்றாழ்ந்த அறிவொட்பம், ஆன்ற அறநூற்றிட்பம், மாண்டமனையாக்கமொடு வேண்டுமரசேற்றமு முற்று மக்கள் பெருமைபெறுவதற்கெல்லாம் முன்னர்முதலுதவுவது மொழிவளப்பம். குதலைமொழி மிழற்றிய தங்குலமொழிபோல் அறிவு திரு ஆற்றல் வளம்பெருக்குதற்கு மதலை பிறிதில்லையாகும். தொல்வளமும் இலக்கணநற்செவ்விகளுமமையாத சிறுமொழிகளாமேனும், தம்மொழியே மதிநுட்பம் நூலாக்கம் சான்றாண்மை சமுதாயவெறுக்கையெலாம் தழைவிக்கத் தக்கதாகும். நாகரிகமென்றெழுந்தது, அன்றுள செந்தமிழுடையார் தளர்வடையின், அவரியலின் சோர்வல்லால் மொழியிடை யோர் குறையுமில்லை. தமிழ்த்தாயும் அவளீன்ற சிலகுதலைமொழிமாருமன்றி நந்நாட்டுள மொழிகளனைத்தும் வடபெருமொழியின் வழிவந்த தொடர்புடைய: அவை பயில்வார்பெரும்பாலும் பிணக்கற்ற மொழியொருமையியலிணக்கம் பேணற்பாலார். தமிழுழுவற் றொல்லுரிமை வடமொழியே வழுத்திநிற்கும். குறையாத வளமுடைய வடசொல்லும், பிழையாத கன்னிமையார் தமிழ்ச்சொல்லும் எல்லையறு தொல்லைமுதலின்றளவு மருவியொன்றிநிலவு நமதிந்தியநாட் டேனைதான் மொழியிகல்போற் பழிதூறு மிழிவேக்கம் வந்த தின்று? மொழிபேணார் முன்னேற்றமோக நலமுணரொணாதார். நாட்டினலம் நமதாக்க மீண்டில்லை, ஒன்றேயாகும். பெருநலம் நம்மவர் வேண்டிற் றெருவெல்லார் தமிழ்முழக்கஞ் செய்யவேண்டும்.

ச. சோமசுந்தரபாரதி.

# *தமிழின் தற்காலநிலை.

அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழி, பண்டொருகாலத்தே சிறப்பு
வாய்ந்து, சான்றோர் கெழுமிய தண்டமிழ்நாட்டினர்மாத்திரமன்றி ஏனை
நாட்டினரும் புகழும்படியான உன்னதநிலையிலிருந்து, இதுபொழுது
புரப்பாரும் படிப்பாருமற்றுத் தனது சீர்குன்றிச் சிறுமைப்பட்டுநிற்
றல் கற்றோர்மாத்திரமன்றி ஏனையோரும் அறிந்ததொரு செய்தியாம்.
இத் தெய்வத்தமிழின் சீர் குன்றக் காரணங்களாயிருப்பவை எவையென
ஆராய்வோமாயின் முதற்கண்ணேநிற்பது அரசாங்கத்தாரின் கண்காணிப்
பின்மையாம். அதற குற்றதுணையாயிருப்பது நமது கீழ்த்தர (ஆரம்ப)
மத்தியதரப் பாடசாலைகள காட்டும் அசிரத்தை (கவனக்குறைவு). இவ்
விரண்டு முக்கியகாரணங்களாலேயே தமிழ் தன்னழகுநலிந்து நிற்கின்
றது. பாடசாலைகளில் தமிழைப்புறக்கணித்து அதனைப்பயிலவிடாது
தடுப்பதோடு நிந்தித்தும் வருகின்றனர். தமிழ்ப்பண்டிதர்களும் அவர்
கட்குரிய மரியாதை வழங்கப்படாது புறக்கணிக்கப்படுகின்றனர்.

தமிழைப் பாடசாலையில் எவ்வாறு புறக்கணிக்கின்றனர் என்ப
தற்கு இரண்டொரு உதாரணங்களைக் காட்டுகிறேன். தமிழின்கண்ணே
ந, ண, ன என்ற மூன்று எழுத்துக்க ளிருக்கின்றன. இவையிற்றை
உபயோகிக்கவேண்டிய இடங்கள் இவையென முன்னோரும் வகுத்து
வைத்துளார். எனினும், பாடசாலைகளிலே ஒலிக்குறிப்பைக் காட்ட
வேண்டுவதுதானே என்றுகூறி, 'வ ந் த ா ன்' என்று எழுதவேண்டிய
விடத்தில் 'வ ன் த ா ன்' என்றும் 'செ ன் று ன்' என்பதைச் 'செந்
றுன்' என்றும், 'நண்டு' என்பதை 'நன்டு' என்றும் இன்னும் இவ்வாறே
பல பி ழை க ள் ஏற்படுமாறும் எழுதுவதாற் பொருள்கெடுவதில்லை
என்று வாதிக்கின்றனர். இதுவன்றி, ஆராய்ச்சியில் வல்லுநர் எனப்
பலராலும் பாராட்டப்பட்டவரும் சென்னைப் பல்கலைக்கழக உயர்தர
வித்யாபட்டம் (M. A.) பெற்றவருமான ஒருவர் சின்னாண்முன்னர்த் தமி
ழில் ரகாம் றகரம் என இரண்டிருப்பது மிகையென்றும், அவற்றுள்
ஏதேனும் ஒன்றே போதுமென்றும் ஹிந்துப்பத்திரிகையில் வெளியிட்
டுள்ளார். இன்னோர், செத்தான் என்று பொருள்படும் இறந்தான் என்ற
சொல்லை இ ர ந் த ா ன் என ஒருவன் எழுதுவானாயின் அது எப்
பொருள் பயக்குமென்று கவனிப்பதில்லை. இவைபோன்ற பலஎடுத்துக்
காட்டுக்களைப்பெருக்கலாம். இத்தகைபிழைகளைச்செய்ய இடந்தருவது

*இவ்வுரைநடை, மாசித்திங்கள் 10௳ திங்கட்கிழமையன்று கல்வி, நகர நாடு ஆட்சியமைச்சர் கனம். டாக்டர் P. சுப்பராயனுர் தலைமையின்கீழ் நடைபெற்ற மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 25-ம் வருஷோத்ஸவ ஸபையிற் படித்தற்கு எழுதியனுப்பப்பட்டது.

எதுவென ஆராயின், பாடசாலைத் தலைவர்களும், கண்காணிப்பாரும் (Inspector) காட்டும் அசிரத்தையே யாமென்பது விளங்கும்.

யான் மிகப்பல ஆண்டுகளாக இல்லையாயினும், சென்ற பத்தாண்டுக ளாகக் கல்வித்துறையில் நடப்பவைகளை நேரில் அநுபவித்துவரு கின்றேன். நான் ஒருவன் கூறுவது எவ்வளவுதூரம் எட்டும்.

அரசாங்கத்தார்நடத்தும் பள்ளிகளிலும் அரசாங்கஉதவிபெற்று நடாத்தப்படும் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்கள் தாய்ப்பாஷையாகிய தமிழிற் போதிய அறிவு பெற்றிருந்தாலன்றி மேல்வகுப்புக்கு மாற்றப் படக்கூடாதெனக் கண்டிப்பான அரசாங்க உத்தரவு இருந்தாலன்றி, இம்மொழியை இனியும் இழிவுபடுத்த முற்படுவரென்பது திண்ணம். பல்லாண்டுகளாக எஸ். எஸ். எல். சி. (S. S. L. C) பரீக்ஷாதிகாரிகள் வெளியிடும் குறிப்பைக் கவனித்தால் யான் கூறியவைகளின் உண்மை காணப்படுவதோடு அப்பரீக்ஷை விடைக்காகிதங்களை ஒருதரம் மே லெழுந்தவாரியாகப் புரட்டினும் இனியும் இக்காகிதங்களைக் கண்ணுற வேண்டுமே என்ற அருவருப்புண்டாவதும் நிச்சயம்.

ஆகவே, இங்கிலையில் கல்விமந்திரியாரவர்கள் தமிழராயிருப்பதால், அவர்கள் நேரிலே ஆராய்ந்து ஆவன செய்யவேண்டுவது அவர்கள் முதற்கடமை என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இனி, கல்வியே கருந்தனமெனக்கொண்டு புகட்டிவரும் நம் மது ரைத்தமிழ்ச்சங்கத் தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில் தேர்ச்சிபெற்றவர்களைப் பல கல்விஸ்தாபனங்களும் இதுபொழுது புறக்கணிக்க முற்படுகின்றன என ஒருசெய்தி கேட்கப்படுகிறது. அன்றியும், கல்வித்துறையிற் சென் னைப்பல்கலைக்கழகத்தாரிடம் தமிழ்மொழியிற் றேர்ச்சிப்பட்டம்பெற்றவர் களையே தமிழ்ப்பண்டிதர்களாக நியமிக்கவும் கல்விபோதிக்கச்செய்யவும் வேண்டுமென இதுபொழுது கிளர்ச்சிசெய்யப்படுவதாகவும் அறிகிறோம். ஓரமின்றி இதனை யாராய்வோமானால் மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின் றும் தேர்ச்சிபெற்றுவந்த மாணவர்கட்குப் பல்கலைக்கழகப் பட்டம்பெற் றோர் ஒப்பாவரோ என்பது ஐயத்துக்கிடமானதாம். எங்ஙனமாயினும் எட்டுணையும் அவர்கட்குத் தமிழ்ச்சங்கமாணவர்கள் தாழ்ந்தவரல்லர். அங்ஙனமாக அவர்களைப்புறக்கணித்தல் நியாயமாகாது. அவ்வாறு புறக் கணிக்கும்படியான அரசாங்க உத்தரவு உண்டோ இல்லையோ யானறி யேன். இதுபொழுது தமிழ்ச்சங்கப் பரீக்ஷைகளிற் றேறியவர்களும் பல்கலைக்கழகப் பட்டதாரிகளோடொப்ப வித்யாஸ்தாபனங்களில் நியம னம்பெறுதற்குத் தகுதியுடையாரென்று அநுமதியளித்தல்வேண்டு மெனத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

---

# முன்னைத் தமிழ்நாட்டுப் பெண்களின் கற்புநிலை.

[கஉ௦-ம் பக்கத் தொடர்ச்சி.]

இனித் தங்கணவர் இறக்கப்பெற்றபின் தமிழ்நாட்டுப் பெண்கள் கொண்டவொழுக்கத்தை மூன்றாகப் பகுக்கலாம்;

க. தங்கணவர் இறந்தாரென்பது கேட்டவுடன்றாமு முயிர் நீங்கப் பெறுதல்.—

உ. எரிபுகுதல்.

ந. தாபதநிலையுடையாராதல் என. அதனை,—

"காதலரிறப்பிற்கனையெரிபொத்தி
யூதுலைக்குருகி னுயிர்த்தகத்தடங்கா
தின்னுயிரீவரீயாராயின்
நன்னீர்ப்பொய்கையினளியெரிபுகுவர்
நளியெரிபுகா அராயினன்பரோ
டுடனுறைவாழ்க்கைக்குநோற்றுடம்படுவர்
பத்தினிப்பெண்டிர்பரப்புநீர்ஞாலத்து"

என்னும் மணிமேகலை (ஊால—சஉ...சஅ.) ச்செய்யுள் அடிகளான் உணர்க. இவ்வாறே, ஸ்ரீமாந். வித்துவான்: மு. இராகவையங்காரவர்களும் தமது பொருளதிகாரவாராய்ச்சியிற் கூறுதல் காண்க. (ஷை பொருள். ஆ. 112-ம் பக்கம் பார்க்க.)

அவற்றுள், ஒருத்தி தன்நாயகன் இறந்தானென்பது கேட்டவுடன் தானு மிறத்தல் தலையன்பாகும். தொல்காப்பியர் காஞ்சித்துறையுள் "கணவனொடுமுடிந்தபடர்ச்சிநோக்கிச், செல்வோர்செப்பியமூதானந்தமும்" என்னுந் துறைக்கு நச்சினார்க்கினியர் 'மனைவி தன்கணவன் முடிந்தபொழுதே உடன்முடிந்துபோகிய செலவுநினைந்து கண்டோர் பிறர்க்குணர்த்திய மூதானந்தத்தானும்' எனப் பொருள்கூறி, ஆனந்தம்- சாக்காடு. முதுமைகூறினர் உழுவலன்புபற்றி எனவும் கூறியிருத்தலினாலே ஒருத்தி தன்கணவன் இறந்தானென்பதுகேட்டவுடனே இறத்தல் தலையன்பென்பது நன்குபுலப்படுகின்றது. கந்தபுராணமுடையாரும், சூரன் போரிலிறந்தானென்பதுகேட்டவுடனே பதுமகோமளை இறந்தாளெனவும் அது தலையன்பெனவும் விதந்து,

"காவன்மன்னவனிறந்தனனெனுமுரைகேன்னத்துண்
மேவுமெல்லையிலசனியேறுண்ட வெம்பணிபோற்
றேவியாகியபதுமகோமளையெனுந்திருமங்கை
ஆவிநீங்கினடலையளியாகியததுவன்றே"

எனக் கூறியிருத்தல் காண்க. வலிந்து தன்னுயிரைவிடாது கேட்டவுடன் இறந்தமையின் இது தலையன்பெனப்பட்டது. இராவணன் இறந்தபொழுது அவனைத் தழுவிக்கொண்டு மண்டோதரி யுயிர்விட்டதாக,

"என்றழைத்தனளேங்கியெழுந்தவன்
பொன்றழைத்தபொருவருமார்பினைத்
தன்றழைக்கைகளாற்றழுவித்தனி
நின்றழைத்துயிர்த்தாளுயிர்நீங்கினாள்"

என இராமாவதாரங் கூறுகின்றது. இவள் கேட்டவுடன் உயிர்நீங்கப் பெறுவிட்டாலும், தழுவிக்கொண்டிறந்தமையின் இதுவும் தலையன்பின் பாற்படும். இவ்வாறிறத்தலைப் புறப்பொருள்வெண்பாமாலையுடையார்,—

"ஒருயிராகவுணர்கவுடன்கலந்தார்க்
கிருயிரென்பரிடைதெரியார்—போரில்
விடனேந்தும்வேலோற்கும்வெள்வளையினாட்கு
முடனேயுலந்ததுயிர்"

எனச் சிறப்பித்துக்கூறுதல் காண்க. இவ்வாறே நெடுஞ்செழியன் உயிர் நீத்தகாலத்து அவன்றேவி பெருங்கோப்பெண்டும்,

"மன்னவன்செல்வுழிச்செல்கயானெனத்
தன்னுயிர்கொண்டவனுயிர்தேடினள்போல்"

ஒருங்குடன்மாய்ந்ததும் ஈண்டு அறியத்தக்கது.

உ. எரிபுகுதல் இடையன்பாகும். கணவனொடன்றி உயிர்வாழ விருப்பின்றி எரிபுக்குவலிந்து உயிர்விடுத்தமையின் இடையன்பாயிற்று. இது, தொல்காப்பியர் "நல்லோள்கணவனொடுநனியழற்புகீஇச் சொல்லிடையிட்டபாலைநிலையும்" எனக்கூறிய துறையாலும், அதற்கு நச்சினார்க்கினியர் கற்புடைமனைவி தன்கணவனிறந்துழி அவனொடெரிபுகுதல்வேண்டி எரியைவிலக்கினாரோடு உறழ்ந்து கூறிய புறங்காட்டு

நிலை' என்னும் உரையானும் உணரக்கிடக்கின்றது. பிறரால் எரிபுகுத்தப்படுதலின்றிப் பிறர்தடுப்பவும் கேளாது அவரை யிகழ்ந்துகூறித் தாமேபுகுந்தமையின் இதுவும் அன்பேயாம். தம்மையெரிபுகாது விலக்கினரை இகழ்ந்து, அவர்க்கு, தமக்கவ் வெரியிருக்கும் நிலையுங் கூறி, எரிபுகும் மகளிரின் வீரச்செயலை,

"பல்சான்றீரேபல்சான்றீரே
செல்கெனச்சொல்லாதொழிகொனவிலக்கும்
பொல்லாச்சூழ்ச்சிப்பல்சான்றீரே
யணில்வரிக்கொடுங்காய்வாள்போழ்ந்தட்ட
காழ்போனல்விணர்நறுநெய்தீண்டா
தடகிடைக்கிடந்தகைபிழிபிண்டம்
வெள்ளெட்சாந்தொடுபுளிப்பெய்தட்ட
வேளைவெந்தைவல்சியாகப்
பரற்பெய்பள்ளிப்பாயின்றுவதியு
முயவற்பெண்டிரேமல்லேமாதோ
பெருங்கோட்டுப்பண்ணியகருங்கோட்டீம
நுமக்கரிதாகுகதில்லவெமக்கெம்
பெருந்தோட்கணவன்மாய்ந்தெனவரும்பற
வள்ளிதழவிழ்ந்ததாமரை
நள்ளிரும்பொய்கையுந்தீயுமோரற்றே"

என்னும் புறநானூற்று (உசசு)ச்செய்யுளா னுணரப்படும். இதனுள் எரிபுகும்மகளிர் தம்மை விலக்குவாரைப் பழித்தலை, 'செல்கெனச் சொல்லா தொழிகெனவிலக்கும்--பொல்லாச்சூழ்ச்சிப்பல்சான்றீரே' என்னும் அடிகளானும், எரிபுகுத லெமக் கெளிதெனக்கூறி எரிபுகும் வீரச் செயலை, 'எமக்கெம்-பெருந்தோட்கணவன் மாய்ந்தெனவரும்பற வள்ளிதழவிழ்ந்ததாமரை—நள்ளிரும்பொய்கையுந் தீயுமோரற்றே' என்னுமடிகளானுமுணர்க. கந்தபுராணத்திலே சூரனுடைய மனைவியர்களுட் பட்டத்துத்தேவி யொழிந்தோர் எரிபுக்கதாகக் கூறப்படுகின்றது. இவ்வழக்கு வடநாட்டிலுமிருந்தமை தசரதன் மனைவியர்களுள், பட்டத்துத்தேவிய ரொழிந்தோர் எரிபுக்கதாக இராமாவதாரங் கூறுதலா னறியப்படும்.

[தொடரும்]

சி. கணேசையர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபத்தைந்தாம்வருஷோத்ஸவ

## வாழ்த்துப்பாக்கள்.

[சோதுகுடி ஸ்ரீமத். M.K.M. அப்துல்காதிறுராவுத்தரவர்கள் இயற்றியது.]

ஆங்கிலமன் னவரிறைமை யுறுசென்னைக்
கவர்ண்மெண்டா ரன்பு மேவி
யோங்குபொது ஜனசமூக முயர்மாண்பு
முன்னதமு முற்று வாழப்
பாங்குறுநன் முயற்சிபல நாளும்
புரிந்துவரும் பண்பை யோர்ந்து
தாங்குமுதன் மந்திரியென் றுனையமைத்த
திறமதனைச் சாற்றற் பாற்றே.

மெய்யாரும் ஜட்ஜுகளும் வியன்கலெக்டர்
களுநீதி விளக்குஞ் செங்கோற்
கையாரும் மதிகவர்னர் களுநாளு
மதிமதிப்பாக் கருத லாலே
ஐயாநீ சென்னையிரா சாங்கமுதன்
மந்திரியே யானாய் இந்நாள்
செய்யாரும் வளமதுரைத் தமிழ்ச்சங்க
விழாப்பதியாய்ச் சிறப்புற் றாயால்.

கல்வியாற் சேடனும்பொற் கனநிதியாற்
குபேரனுமீக் கணிப்பக் கஞ்சச்
செல்வியா ரிருவரையுஞ் சேர்ந்துகட
லுடைபுனைந்த தேய மெல்லாம்
நல்வியா பகம்பெறுநம் தமிழ்ச்சங்கத்
தலைவனென நாளும் வாழும்
சொல்வியா முனைநிகரும் ராஜா
ஜேஸ்வரனும் துரைசொற் கேற்ப.

ஈண்டிருக்குந் தமிழ்ச்சங்கத் திருபத்தைந்
தாம்யாண்டின் எழில் விழாவிற்
காண்டிருக்குஞ் சபாபதியா யமர்ந்தரிய
பிரசங்க வமுத மூட்டி
நீண்டிருக்கும் இவ்வுலகில் டாக்டர்சுப்ப
ராயதுரை நிருப னேபல்
லாண்டிருக்கும் புகழ்படைத்துப் பல்லூழி
வாழ்ந்துசுகம் அடைகு வாயே.

ஸ்ரீ:

# தொல்காப்பியனாரும் புள்ளியெழுத்துக்களும்.

தொல்காப்பியம் நூன்மரபில் எழுத்துக்களின் பெயர் முறை தொகை முதலியவற்றை விளக்குமிடத்தே, எழுத்துக்களின் வரிவடிவு களையும் கூறப்புக்க ஆசிரியர் தொல்காப்பியனார், அவ்வெழுத்துக்களின் உருவங்கள் இன்னவாறு என்பதை முழுதுங்குறியாது, அவற்றின் ஒருசார் உறுப்பினையே கூறிச்செல்லுதல் காணலாம்.

"புள்ளி யில்லா வெல்லா மெய்யும்
உருவுரு வாகி யகரமோ டுயிர்த்தலும்
ஏனை யுருவோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயிரண் டென்ப வுயிர்த்த லாறே"

என்ற சூத்திரத்து—மெய்யும் உயிருங் கூடிப் புணருமிடத்து மெய்யின் வடிவு, திரியாதுந்திரிந்தும்நிற்கும் என்று பொதுப்படக்கூறினரே யன்றி அம்மெய்களின் உருவம் இன்ன என்று ஆசிரியர் விளக்காமை யுங் காண்க. இதனால், தொல்காப்பியனார்காலத்தில் எழுத்துக்கள் வரி வடிவுடையனவாய் யாவரானுந் தெளிய அறியப்பட்டிருந்தன என்பதும், அதனால் அவ்வடிவுகளை விரித்துரைக்க அவர் முன்வந்திலர் என்பதும் அறியப்படும். படவே, நன்னூலார்கூறியவாறு, 'தொல்லை வடிவின வெல்லா வெழுத்தும்' என்பதே தொல்காப்பியனார் கருதியதும் என்ப தாயிற்று. ஆயினும், அத் தொல்லைவடிவுகளிற் கண்ட ஒருசார்குறியை மட்டும் விதிமுகத்தானும் உடம்பொடுபுணர்த்தலானும் அவ்வாசிரியர் விடாதுகூறிச்செல்லுதல் குறிப்பிடத்தக்கது. அஃதாவது—அவ் வெழுத்துக்களுட் பல புள்ளிபெற்றுநிற்கும் நிலைமையேயாம். உயிர், மெய், சார்பிற்றோற்றம் என்ற மூவகைப்பட்ட எழுத்துக்களினும் அங் ஙனம் புள்ளிபெறுவனவற்றைப்பற்றி ஆசிரியர் கூறுவனவற்றை ஈண்டு விளக்குவேன்.

## I. புள்ளிபெறும் மெய்கள்.

நெடுங்கணக்கினுள் தனிமெய் பதினெட்டும் புள்ளிபெற்றேநிற்கும் என்பதனை—

"மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்" (15)

"மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்" (104)

என்ற இரண்டுசூத்திரங்களால் விதித்தும், 'மஃகான்புள்ளி' 'யரழவென் னும் புள்ளி' என்பனமுதலியவற்றால் உடம்பொடுபுணர்த்தும் தொல் காப்பியர் கூறுதல் காணலாம். 'புள்ளி' என்று மெய்கட்குக் குறியிட்டு அவர் ஆளுவதும் புள்ளியின்றித் தனிமெய்கள் வழங்கா என்பதைக் குறிப்பிக்கும். "மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்" என்பதனால், அம்மெய்கள் புள்ளிபெறுவது அடிப்பட்ட மரபென்பதும், எழுதுவோ ரது சோர்வால் அம்மரபு தவறநேர்ந்தவிடத்துச் சொற்பொருளுணர்ச்சி சிதைந்துவந்தமையின் புள்ளியிடுவதை ஆசிரியர் வற்புறுத்தலாயி னர் என்பதும் புலப்படக்கூடியன. இவற்றால், தொல்காப்பியனார்காலத்தே தனிமெய்கள் புள்ளியிடாமல் எழுதப்பட்டனவல்ல என்பது தெளியப் படும்.

## II. புள்ளிபெறும் உயிர்கள்.

மெய்கட்குப் புள்ளிவிதித்த ஆசிரியர் உயிர்களுட்சிலவும் அது பெற்றுநிற்கும் என்பதனை—

"எகர ஒகரத் தியற்கையு மற்றே"

என்று அடுத்தசூத்திரத்தாற் கூறுகின்றார். பன்னீருயிர்களுள்ளே எகர ஒகரங்கள்மட்டும் புள்ளிபெறுவது பண்டைவழக்கென்பது—'எகரவொ கரத் தியற்கையும்' என்பதனால் அறியப்படும். இதனால், குறிலும் நெடிலுமான அவ்விரண்டுயிர்கட்கும் வரிவடிவு பொது என்பதும், அவற் றுட் குறிலின்வேறுபாடுதோன்ற அதற்குப் புள்ளியிடப்படும் என்பதும் பெறப்படுகின்றன. ஆயின், குறிலின் நீட்சியே நெடிலாதலின், அந் நெடிலின் வேறுபாடுவிளங்க அதற்குப் புள்ளியையிடாமற் குறிலுக் கிட்டதன்கருத்து என்னை என்ற கேள்வி, இங்கு உண்டாதல்கூடியதே. இதற்கு இரண்டுவகையாகச் சமாதானங் கூறலாகும். ஆரியமொழியுள்

குறிலன்றி நெடில் எகார ஒகாரங்களே வழங்குதலும், அவற்றின் குறில்கள் தமிழ்க்குரிய சிறப்பெழுத்துக்க ளாதலும் நன்கறியப்பட்டவை. அவ்விருமொழிகட்கும் பொதுவாகவமைந்த எ, ஒ என்றவடிவுகளை ஆரியத்திற்போல நெடிலொன்றுக்குமேகொண்டு, அவற்றின் குறில்களுக்குரியனவல்ல என்று தமிழில் விலக்காமைப்பொருட்டு, அவற்றுட் குறிலெகார ஒகாரங்கட்குப்புள்ளியிட்டு வேற்றுமைப்படுத்திருத்தல்கூடும். அன்றேல், மாத்திரை குறுகியஎழுத்துக்கட்கே புள்ளியிடுவது மரபுஎன்பது, இனிக் கூறப்புகும் குற்றுகர குற்றிகர முதலியவற்றின் வடிவுகளாலும் விளங்குதலின், அங்ஙனம் குறுகிய எழுத்துக்கட்கு இட்டுவந்த புள்ளியை, எகார ஒகாரங்கட்கன்றி அவற்றின்குறில்களுக்கே வழங்கியிருத்தல்வேண்டும். இவற்றுள் ஏற்புடையது கொள்க. பிற்காலத்தார் சிலர் நெடிலேகாரவோகாரங்களே புள்ளிபெறுவனவாகக்கருதி யெழுதியது,* முன்னைவழக்கறியாமையாலென்க.

இங்ஙனம் குறிலின்குறியாகப் புள்ளியிட்டுவந்த வழக்குத் தனி எகர ஒகர உயிர்கட்குமட்டுமன்றி, மெய்யூர்ந்த அவ்வுயிர்கட்கும் உண்டென்பது, உரையாசிரியர்முதலியோர் உரைகளான் உணர்க. 'எகர வொகர மெய்ம்மெய் புள்ளி' என்ற நன்னூற்சூத்திரப்பகுதிக்கு— 'தனித்தும் உடம்பூர்ந்தும் வரும் எகரமும் ஒகரமும் தனிமெய்களும் பெறும் இயல்பாகிய புள்ளியைப் பிற்காலத்து ஒழித்துவரைந்து, எகார ஒகாரங்களோடும் உயிர்மெய்களோடும் ஐயப்படவழங்கும் வழக்கினையுடையவன்றித், துணியப்படுந் தொல்லைவடிவினது உறுப்பாய புள்ளியைப் பெறும்' என்றெழுதிய சங்கரநமச்சிவாயப்புலவர் உரை ஈண்டு அறியத்தக்கதாம். இதனால், புள்ளியிடும்வழக்கைப் பின்னோர் நெகிழவிட்டமையால், பொருளில் தடுமாற்றமுறநேர்ந்தசெய்தி நன்குவிளங்கும். எகரவொகரங்கட்குப் புள்ளியிடும்வழக்கு நன்னூலார்காலத்தும் பயின்ற

---

*இராமாநுசகாண்டிகை; பிற்காலத்தில், எகாரத்தினின்று ஏகாரத்தை வேறுபடுத்தக் கீழ்க்கோடிழுக்கப்படுமுறையில், எகாரநெடிலுக்கே புள்ளியையிட்டு இன்னோர் வேறுபடுத்தலாயினர்போலும். ஏகாரநெடிலுக்குக் கீழ்க்கோடிழுக்கும் முறையை உண்டாக்கியவர், வீரமாமுனிவர் (Beschi) என்பர் சிலர் (Burnell's S. I. Poleography, p. 5.). ஆனால், அங்ஙனம் கோடிழுப்பது, அம்முனிவர்க்கும் முற்பட்ட சாஸனவழக்காயிருத்தலால், அக்கூற்றுப்பொருந்தாதாம். (T. A. S. Vol. i. p. 202).

தென்றே சொல்லலாம். அவர்காலத்து வழக்கின்றேல், இவ்வெழுத்துக் களும் மெய்களும் ஒழிய ஒழிந்தவற்றுக்குப் புள்ளியில்லையென்பது பட—

"தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர வொகரமெய் புள்ளி"

என்று, புள்ளியெழுத்துக்களை அவ்வாசிரியர் விதந்து ஓதாரெனவுணர்க. பிற்காலத்துப்போலவே நன்னூலார்நாளிலும் புள்ளியிட்டெழுதுவதிற் பொதுவாகவே சோர்வுகாட்டப்பட்டுவந்ததென்பதற்கு, அவர்காலத்துச் சாஸனங்களே தக்க சான்றுயுள்ளன. அவற்றில், மெய்கட்குப் புள்ளி யிடுவதே அரிதாகக் காணப்படுநிலையில், எகர, ஒகரங்கட்குப் புள்ளி காணுமை வியப்பிற்குரியதன்று. ஆயினும், அக்காலத்துத் தமிழறிஞர் தனித்தும் உடம்பூர்ந்தும் வரும் எகர ஒகரங்கட்குப் புள்ளியிடும் வழக்கைப் போற்றிவந்தவர்களேயாவர். மாத்திரைச்சுருக்கத்துக்குத் தண்டியலங்காரமுடையார் காட்டிய மேற்கோளில்,

"நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமாம்
நீர்நிலையோர் புள்ளி பெறநெருப்பாம்"

எனவரும் வெண்பாப்பகுதி இங்கறியத்தக்கது. நேரிழையார் கூந்தல்—ஓதி: அது புள்ளி பெறவே ஒதி என்றாகி மரத்தைக் குறிக்கும்; நீர்நிலை ஏரி: அது புள்ளி பெறவே எரி என்றாகி நெருப்பைக்குறிக்கும்—என் பது இப்பாடற்கருத்தாய் எகர ஒகரவுயிர்கள் புள்ளிபெற எழுதப்பட்டு வந்த பழையவழக்கைத் தெளிவாக்குதல் காண்க.

இனி, மெய்யூர்ந்த எகரவொகரங்கள் புள்ளிபெற்றுவழங்கின என் பதற்குப் பழைய நூற்பிரமாணங்காண்டல் அரிது. ஆயினும், தந்தி வர்மன் (கி. பி. 800–840) என்ற பல்லவனது 4-ம் ஆட்சிவருஷத்தே திருவெள்ளறைக் கிணறொன்றில் வெட்டப்பட்டுள்ள சாஸனத்தில்,* மெய்யூர்ந்த எகரவெழுத்துக்கள்,—நான்காவதேடுத்து' 'பேருங்கிணறு' 'சேய்து' என்றிவ்வாறு தகர பகர சகரங்களின்மேற் புள்ளியிட்டு வரையப்பட்டுள்ளன. மெய்யூர்ந்த ஒகரத்துக்கு இத்தகைய பிரமாணங் கிடைத்திலது.

*The Journal of the S. I. Association, Oct., 1910, p. 173.

## III. புள்ளிபெறுஞ் சார்பெழுத்துக்கள்.

ஆசிரியர் தொல்காப்பியனார் குற்றுகரம், குற்றிகரம், ஆய்தம் என்ற மூன்றும் சார்பிற்றோன்றும் எழுத்துக்கள் என்பதை—

"அவற்றுள், குற்றியலிகரம் குற்றியலுகரம்
ஆய்தமென்ற, முப்பாற்புள்ளியு மெழுத்தோரன்ன"

என்ற சூத்திரத்தாற் கூறுவர். இம்மூன்றும் புள்ளியுடையனவாகவே ஆசிரியர்காலத்து வழங்கின என்பது அறியத்தக்கது. அவற்றை முறையே விளக்குவேன்.

### (1) குற்றியலுகரம்.

தொல்காப்பியம் புணரியலில் 'மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்' என்பதனால், மொழியீற்று மெய்யெல்லாம் புள்ளிபெற்று நிற்கும் என்று நியமித்த ஆசிரியர்—'குற்றியலுகர மற்றெனமொழிப' என்ற அடுத்த சூத்திரத்தால், குற்றுகரமும் அம் மெய்யீற்றின் தன்மையைப்பெறும் என்று கூறினர். இதனால், குற்றுகரமும் மெய்யீறு போலப் புள்ளிபெற்றுநிற்கும் என்பதே ஆசிரியர்கருத்தென்பது நன்குபெறப்படும். இதுவே முன்னோர்பலருங் கொண்ட முடிபுமாகும். "ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்" என்ற செய்யுளியற்சூத்திரவுரையுள்— "எழுத்தோத்தினுள் 'மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்' எனக்கூறிக் 'குற்றியலுகரமு மற்றென மொழிப' எனக் குற்றுகரத்துக் குப் புள்ளிபெறுதலுங் கூறினான்"—என்று நல்லறிவுடைய தொல்பேராசிரியர், முற்குறித்த தொல்காப்பியனார்கருத்தறிந்து எழுதியது காண்க. இவ்வாறே, யாப்பருங்கலம் 2-ஆம் சூத்திரவுரையுள்—'குற்றியலுகரமும் குற்றியலிகரமும் புள்ளிபெற்றுநிற்கும்; என்னை?

"குற்றிய லிகரமுங் குற்றிய லுகரமும்
மற்றவை தாமே புள்ளி பெறுமே"

என்பது சங்கயாப்பு ஆதலின்" என, அந்நூல் விருத்திகாரரும் முன்னூற்பிரமாணத்துடன் எழுதியது அறியத்தக்கது. இவற்றால், முற்காலத்தே குற்றுகரத்துக்குப் புள்ளியிட்டெழுதும்வழக்குப் பெருகியிருந்தமை புலனாம்.

இனி, உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' என்பதிலுள்ள 'அற்று' என்பது, மேற்சூத்திரத்துள்ள 'புள்ளியொடு நிலையல்' என்ற தொடரைநோக்கியதாகக் கொள்ளாது, தொடர்பற்றுநிற்கும் சூத்திரமொன்றனுடன் மாட்டெறிந்து—'ஈற்றுக்குற்றியலுகரம் புள்ளியீறுபோல உயிரேற இடங்கொடுக்கும்' என்று பொருள்கூறலாயினர். இப்பொருள் ஆசிரியர்கருத்து ஆகாதென்பதுபற்றி, நன்னூல் விருத்திகாரரான சங்கரநமச்சிவாயப்புலவர் "உயிர்வரி னுக்குறள் மெய்விட் டோடும்" என்ற உயிரீற்றுப்புணரியல், 14-ம் சூத்திரத்து எழுதிய விசேடவுரை வருமாறு:—

"ஆசிரியர் தொல்காப்பியர் 'அவற்றுள், மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்' எனவும், 'குற்றிய லுகரமு மற்றென மொழிப' எனவும் கூறிய சூத்திரங்களுள், 'அற்று' என்னும் மாட்டேற்றிற்கு 'மெய்யீறுபோலக் குற்றியலுகரவீறும் புள்ளியொடு நிற்கும்' எனப் பொருள்கொள்ளாது, இம்மூன்றுஞ்சூத்திரத்தைப் 'புள்ளி யீற்றுமுன் னுயிர்தனித் தியலாது, மெய்யொடு சிவணு மவ்வியல் கெடுத்தே' என்னும் முப்பத்தாறுஞ் சூத்திரத்தோடு மாட்டெறிந்ததாகக்கொண்டு, 'குற்றியலுகரமும் புள்ளியீறுபோல உயிரேற இடங்கொடுத்துக் கெடாது இரண்டியிரும் ஒருங்குநிற்கும்' எனக் கூறிச் சாதிப்பாரும் உளர். அவ்வாறு கூறல் மாட்டேற்றிலக்கண மன்றாம்; அன்றியும் மெய் உயிர் என்பன உவமவாகுபெயராய் வந்த காரணக்குறியல்லவாதல் வேண்டும்; அதனால், அஃது அந்நூலாசிரியர்க்குக் கருத்தன்றாம்." எனக் காண்க.

இவற்றால், பிற்காலத்து உரைகாரரும், குற்றியலுகரம் புள்ளி பெற்றுநிற்கும் என்ற பேராசிரியர்முதலியோர் கொள்கையையே பெரிதும் தழுவிநிற்றல் காணலாம். ஆகவே, முற்றுகரத்தின் வேறுபாடுதோன்றக் குற்றுகரங்கட்கு கொக்கு, நாடு, வாகு என்பனபோலப் புள்ளியிட்டெழுதலே தொல்காப்பியர்காலவழக்கு என்பது தெளியப்படும்.

## (2) குற்றியலிகரம்.

குற்றியலுகரத்தைப் பெரிதும் பற்றுக்கோடாகக்கொண்டுவரும் குற்றியலிகரம் புள்ளிபெறுவதும் தொல்காப்பியனார்காலத்து வழக்கேயாம். என்னை? 'ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்' என அவ்வாசிரியரே செய்யுளியலில் தெளிவாக இதனை யெடுத்தோதுதலான் என்க. இச்சூத்திரத்துக்குப் பேராசிரியர்,—

"மேற்கூறிய எழுத்திலக்கணவகையானும், ஈண்டோதும் அசைக்குறுப்பா மாற்றானும் எல்லாம் குற்றியலிகரம் ஒற்றெழுத்தியற்றேயாம். எனவே, எழுத்தோத்தினுள்...(ஒற்றேபோலக்) குற்றியலுகரத்துக்குப் புள்ளிபெறுத லுங் கூறினன்; அதுபோலக் குற்றிகாமும் புள்ளிபெற்றுநிற்றலுடைத்து... இவற்றையெல்லாம்'ஒற்றெழுத்தியற்றே'என்பதனால் புள்ளியிட்டு எழுதுக."

என்று எழுதிச்செல்லும் உரைவிசேடம்* ஈண்டு உணரற்பாலது. யாப் பருங்கலவிருத்தியுடையாரும், குற்றுகரம்போலவே குற்றிகரமும் புள்ளி பெறும் என்பதற்குச் சங்கயாப்பு என்ற முன்னூலே மேற்கோள்காட்டு தல் மேலே குறிக்கப்பட்டது. சிவஞானமுனிவரும், தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தியுள்—'குற்றியலுகரமு மற்றென மொழிப' என் னுஞ் சூத்திரத்தாற் குற்றியலுகரமும் புள்ளிபெற்றுநிற்கும் என முற் றுகரத்தோடு இதனிடை வரிவடிவினும் வேற்றுமைதோன்றக் கூறி, உம்மையாற் குற்றியலிகரமும் புள்ளிபெற்று நிற்கும் என்றோதினமையா னும்" என்றெழுதி, குற்றுகரத்தோடு குற்றிகரமும் புள்ளிபெற்றுநிற் கும் என்பதே தொல்காப்பியனார்கருத்தென்று விளக்கிச்செல்லுதல் கண்டுகொள்க. இவற்றால், வண்டியாது, நாகியாது, கேண்மியா என்று, குற்றிகரங்கட்கு புள்ளியிட்டெழுதுவதும் தொல்காப்பியனார்காலவழக் கென்பது நன்கறியப்படும்.

## (3) ஆய்தம்.

குற்றெழுத்தின்முன்னதாகவும் உயிரொடுபுணர்ந்த வல்லெழுத் தின்மேலதாகவும் வரும் ஆய்தவெழுத்து அடுப்புக்கூட்டுப்போல மூன்றுபுள்ளிவடிவினது என்றெழுதுவர் நச்சினார்க்கினியர். கேடகப் படையின் ஒருசார் உறுப்புப்போறலின், ஆய்தம் என்பது திரிந்த காரணக்குறியாமென்பது பின்னோர் கொள்கை. இவற்றுள் பிற்கூறிய விற்பத்திப்பொருள் அடிப்படைதோன்று அன்று. கருவிகட்கெல்லாம் பொதுவாக வழங்கும் ஆயுதமென்பது ஈண்டுக் கேடகத்தைமட்டுஞ் சுட்டி, அதனுறுப்பான முக்குமிழ்வடிவை உணர்த்திற்றென்றல் அத் துணைச் சிறப்புடையதன்று. அதனால், அதனினுஞ்சிறந்த விற்பத்தி ஆய்தச்சொற்கு உண்டென்றே தோற்றுகின்றது.

---

* நச்சினார்க்கினியர், குற்றியலிகரத்துக்குப் புள்ளியிடும்வழக்கைக் குறியா ததுபோலவே, 'ஒற்றெழுத்தியற்றே குற்றியலிகரம்' என்ற இச்சூத்திரத்துக் கும் குற்றிகரம் புள்ளிபெறும் என்று உரையெழுதாதுபோயினர்.

பாஷாதத்துவ-ஆராய்ச்சியில் வல்லவராய்ச் சமீபத்திற் காலஞ் சென்ற ப்ரும்மஸ்ரீ ஆர். சாமிநாத ஐயரவர்கள்—வேதத்திலே ஜிஹ்வாமூலீயத்தொனி பெறுவதோர் எழுத்துக்கு 'ஆஸ்ரிதம்' என்ற பெயரை வேதவிலக்கணம் இட்டுவழங்குவதென்றும், அத்தகைய உச்சரிப்புடன் அஃகம் முதலியனவாகத் தமிழில்வழங்கும் எழுத்துக்கும், தமிழிலக்கணம் வகுத்த ஆதிபிருடிகள் அவ்வடபெயரையே 'ஆய்தம்' என்று திரிய வழங்கினாரதல்வேண்டும் என்றும் கருதுவாராயினர்.* இக்கருத்து அரியதொன்றாதலின், நம்மனோர் ஆராய்ச்சிக்கு உரியதேயாகும். வடமொழியுள் சொல்லிடைவரும் ஸகாரம், மஸ்ரானம்-மயானம், ஸ்மஸ்ரு—மயிர் என்றவாறு யகரமாதலும், ஸ்ருதி—சுதி, ஸ்ரீயரன்—சீதரன் என்றவாறு ரகரங்கெடுதலும் தமிழுக்கமைந்தனவாம். அம்முறையில், ஆஸ்ரிதம் ஆய்தம் எனத் திரிந்ததென்றல் ஏற்புடைத்தாம் என்க. ஆஸ்ரிதம் என்பது 'சார்ந்தது' என்னும் பொருட்டாகலின், அதன்றிரிபான ஆய்தம் சார்பெழுத்தொன்றற்குப் பெயராயிற்று. எனவே, 'கஃ கரோதி, கஃ வஹதி' என்றவடதொடர்களில்வரும் விஸர்க்கத்தின் ஒலிவடிவுபோன்றதே ஆய்தத்தின் ஒலிவடிவும் என்பது பெறப்படும். இனி, ஆய்தத்தின் வரிவடிவு முப்புள்ளியுடையது என்றெழுதிய நச்சினார்க்கினியரே—'இக்காலத்தார் நடுவு வாங்கியிட்டு எழுதுப' என்று, அது தங்காலத்து வழங்கிய மாதிரிகையையும் கூறுவர். இதனால், அடுப்புக்கூட்டுப்போல ஃ—என்றவாறு முப்புள்ளியுடையதாகக் கருதப்பட்ட ஆய்தம், மேனடுப்புள்ளியின்றி ∘∘ என்று பிற்காலத்தே மாறலாயிற்றென்பது அவ்வுரைகாரர்கருத்து என்பது விளங்கும். எனவே, வடமொழியுள் மேலுங்கீழுமாக அமைந்த விஸர்க்க இரட்டைப்புள்ளிகளைப்போலவே, தமிழில் அடுத்தடுத்து ஆய்தப்புள்ளிகள் முன்பு வழங்கின என்பதாயிற்று. இவ்வாறன்றி, ஃ-என மேலுங்கீழுமாக இரண்டும், அவற்றின் இடப்பக்கத்திடையே ஒன்றுமாக முப்புள்ளிகளுடன் ஆய்தம் முன்பெழுதப்பட்டதென்றும், அவற்றுள் நடுப்புள்ளியைநீக்கித் தங்காலத்தவர் வழங்கிவந்ததனையே நச்சினார்க்கினியர்

---

* இக்கருத்தை எழுத்துமூலமாக ஐயரவர்கள் வெளியிட்டசெய்தி தெரியவரவில்லை. எனினும், நேரில் என்னிடம் பிரமாணத்துடன் விளக்கமாக அவர்கள் கூறியுள்ளார்கள்.

குறிக்கலாயினர் என்றும் கருதவும் இடமுண்டு. இவ்வாறாயின், விஸர்க்க வடிவும் ஆய்தவடிவும் ஒன்றாகவேமுடியத் தடையில்லை. அடுப்புக்கூட்டை அவ்வுரைகாரர் உவமையாகக்காட்டியது ஈண்டுப் பெரும்பான்மை உருவொத்தல்பற்றி என்றே கொள்க.

இனி, ஆய்தம் முப்புள்ளியினதாக உரைகாரர்கள் எழுதிவருவதற்குப் பழையநூற்பிரமாணங் காணப்படாமை குறிப்பிடற்குரியது. 'ஆய்தமென்ற முப்பாற்புள்ளியும்' எனத் தொல்காப்பியனார் அதன் வடிவு கூறிற்றிலரோ எனின், அதனை ஈண்டு ஆராய்வேன். தொல்காப்பியநூன்மரபில்—

"அவைதாம்
குற்றிய லிகரங் குற்றிய லுகரம்
ஆய்த மென்ற
முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன"

என்பது சார்பெழுத்துக்களைப்பற்றிய சூத்திரம். இதற்கு—"மேற் சார்ந்துவரும் எனப்பட்டவைதாம் குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஆய்தமென்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளிவடிவும் ஆம்; அவையும் முற்கூறிய முப்பதெழுத்தோடு ஒருதன்மையவாய் வழங்கும்" என்பது நச்சினார்க்கினியருரை. உரையாசிரியராகிய இளம்பூரணவடிகளும் இக்கருத்தேபடப் பொருளெழுதிக் "குற்றியலிகரமும் குற்றியலுகரமும் என எண்ணும்மை விகாரத்தாற் றொக்கன" என்றார். இவற்றால் 'முப்பாற்புள்ளியும்' என்ற விசேடியத்துக்கு—'ஆய்தமென்ற' என்ற தொடரைமட்டும் விசேடணமாக்கி—'குற்றிகரமுங் குற்றுகரமும் ஆய்தமாகிய முப்புள்ளியும்' என அவ்வுரையாளர்கள் பொருள்கொண்டனர் என்பது புலப்படும். ஆயின், இதுவே தொல்காப்பியனார்க்குங் கருத்தென்பதற்குச் சூத்திரப்போக்கு அத்துணை அநுகூலமுடையதாகத் தோன்றவில்லை. இதுவே கருத்தாயின், எண்ணும்மைகளைக் குற்றிகர குற்றுகரங்கட்குங் கொடுத்து மயக்கவையாது அவர் சூத்திரித்திருப்பர். அங்ஙனமன்றி, முற்றும்மை ஒன்றேகொடுத்து முடித்தெண்ணினமையான்,—குற்றியலிகரங் குற்றியலுகரம், ஆய்தமென்ற, முப்பாற் புள்ளியும்' என்பதற்கு, அம்மூவகைப்பட்ட புள்ளியெழுத்துக்களும் என்பதே ஆசிரியர் கருதியபொருளாம் என உணர்க. 'ஆய்தமென்ற'

என்பது, 'சொற்சிரடி' என்று நச்சினார்க்கினியரே எழுதுவர். இங்ஙனம், அத்தொடரைச் சொற்சிரடியாக்கி ஆசிரியர் தனியேபிரித்த கருத்து—'முப்பாற்புள்ளியும்' என்ற விசேடியத்தை ஆய்தத்துக்கே உரியதாகக்கொண்டு உலகமயங்காமைப்பொருட்டே என்பது நோக்குவார்க்கெல்லாம் நன்குவிளங்கும். எனவே, 'முப்பாற்புள்ளியும்' என்பதற்குச் சார்பெழுத்துக்கள் மூன்றுமே விசேடணங்களென்பதும், அம்மூன்றும் புள்ளிபெறுவனவாதலின் 'முப்பாற்புள்ளி' எனப்பட்டதென்பதும் தேற்றமென்க. தொல்காப்பிய முதற்சூத்திரவிருத்தியுள், ஆசிரியர் சிவஞானமுனிவரும்,—

"ஒருமொழியைச் சார்ந்துவரும் இயல்பன்றித் தனித்தியங்குமியல்பு தமக்கில என்றலின் அவைதம்மை எடுத்தோதிக் காட்டலாகாமையின், வருஞ் சூத்திரத்தால் அவற்றுக்கு வேறு வேறு பெயரிட்டு—'அவைதாம், குற்றியலிகரங் குற்றியலுகரம் ஆய்தம்' என்றும், அம்மூன்றும் புள்ளிபெறுதல் பற்றிப் பொதுப்பெயராக 'முப்பாற்புள்ளியும்' என்றும் ஓதினர்."

என்று மேற்கூறிய கருத்தேபட எழுதிச்செல்லுதல் ஈண்டு அறிந்து போற்றத்தக்கதாகும். இங்ஙனம், ஆய்தத்துக்கே முப்பாற்புள்ளியை உரியதாக்கி உரைகாரர்கள் கூறிப்போந்த பொருளினின்றே மூன்று புள்ளியுடையதாக அவ்வாய்தங் கருதியெழுதப்பட்டதென்றே தோற்றுகின்றது. அதனால், நச்சினார்க்கினியர் குறித்தவாறு, விஸர்க்கம்போல இருபுள்ளிகளுடையதாக இவ்வெழுத்து ஆசிரியர் காலத்தும் வழங்கியதெனலே பொருத்தமென்க. ஆயின், இத்தகைய ஆய்தவடிவு பழைய சாஸனமுதலியவற்றிற் காணப்படவில்லை. 8-ஆம் நூற்றாண்டில் பல்லவமல்லன்காலத்ததாக அமைந்த கசகுடிப்பட்டயத்துள்*—'வெஃகா' என்ற சொல் வருமிடத்து, ⁖ என்று, மேலும்கீழும் புள்ளிகளும், இவற்றிடையே சிறிதுவளைந்த கோடும் உடையதாக ஆய்தம் வரையப்பட்டுளது. இஃது அக்காலத்துவழங்கிய அவ்வெழுத்தின் மாதிரிகையாகக் கொள்ளத்தடையில்லை. ஆயதம் என்ற வடசொற்கு 'நீண்டது' என்பது பொருளென்பராகலின், ஈண்டு நீண்ட கோடுள்ளது எனல் பொருந்தும். [பலவகைவடிவுகளைக் கூறுமிடத்து நன்னூற் பழைய

*S. I. I. Vol. ii, No. 73—Kasakudi Plates of Nandivarman, Plate, XV.

உரைகாரரான மயிலைநாதர்†—'சதுரம், ஆயதம், வட்டம், முக்கோணம், சிலை' என்றின்னவற்றைக் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் இவ்வாயதமும் ஒன்றாய் நீண்ட வடிவினைக் குறித்தல் காண்க.] இதனால், நீண்டகோடுள்ளதாய்ப் புள்ளிபெறுதலின் அவ்வாயதமே, ஆய்தம் என்றும் ஆய்தப்புள்ளி (38) என்றும் வழங்கலாயிற்றுப்போலும்—என்று சாஸனவெழுத்தமைதிகொண்டு நாம் கருதலும் பொருத்தமுடையதாகின்றது. பல்லவசாஸனத்துக் கண்ட இவ்வாய்தவடிவைப் போலவே, வடமொழிவிஸர்க்கத்துக்கு—மேலுங் கீழும் அமைந்த இரட்டைப்புள்ளி வடிவேயன்றி, ÷ —என இடைக்கோடு வளைவின்றியும் பிற்பட்ட பாண்டியசாஸனமொன்றில் ‡ காணப்படுதல் ஈண்டு ஒப்பிடத்தக்கதாம். ஆகவே, ஆய்தச்சொல்லின் மூலம் ஆஸ்ரிதமாயினும், ஆயதமாயினும், அவ்வெழுத்துக்கும் விஸர்க்கத்துக்கும் ஒலிவடிவும் வரிவடிவும் ஒன்றாகவே ஆசிரியர்காலத்தில் அமைந்திருந்ததென்பதும், முப்பாற்புள்ளியினதாக அது கருதப்பட்டது மிகப் பிற்காலத்தேதான் என்பதும் மேற்கூறியவற்றினின்று நன்கு பெறப்படுகின்றன.

இனி, எழுத்துக்களின் பிறப்புமுறைமையைக் கூறிவருமிடத்தே ஆசிரியர் தொல்காப்பியனார்—

> "சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
> தேர்ந்துவெளிப் படுத்த வேனை மூன்றும்
> தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி
> ஒத்த காட்சியிற் றம்மியல் பியலும்"

என்ற சூத்திரத்தால், குற்றிகர குற்றுகர ஆய்தங்களாகிய சார்பெழுத்துக்களின் தோற்றவியல்புங் கூறுவர். குற்றுகர குற்றிகரங்கள் தத்தஞ்சார்பாகிய வல்லெழுத்துக்களின் சிறப்புப் பிறப்பிடங்களையே தமக்கும் உரியனவாகக்கொண்டு ஒலித்தல்போல ஆய்தமும் கொண்டொலிக்கும் என்பது இச்சூத்திரத்தால் அறியலாகும். எனவே, ஆய்தம் தன்சார்பாய வல்லெழுத்தின் தன்மையதாமன்றித் தனக்கென்று பிறிதோரொலி உடையதன்று என்பதாயிற்று; அஃதாவது-ககரத்தின்மிசை கஃகறொதி என்பதிற்போலவும்,சகரத்தின்மிசை நிஸ்ஸ்வயஃ, விஸ்ஸ்ராந்திஎன்பவற்றிற்போல

†நன்னூல், 453, மயிலைநாதருரை.
‡Dalavay Agraharam Plates—T. A S. Vol. i, pp. 126-7.

வும், தகரத்தின்மிசை *ஃஃதவதி, என்பவற்றின் ஒலிபோலவும், பகரத்தின்மிசை ஃவேவதி—என்பதிற்போலவும் றகரத்தின்மிசை (குதிரைக்குத் தெலுங்கர் கூறும்) 'ஶுர்ரம்' என்பதன் ஒலிபோலவும்—ஆய்தம் ஆசிரியர்காலத்தே உச்சரிக்கப்பெற்று வழங்கியதென்பதாம். இப்பொழுது ககரத்துக்குமுன்வரும் ஜிஹ்வாமூலீய ஒலியே ஏனை வல்லெழுத்துக்கட்கு முன்வரும் ஆய்தவொலியாக வழங்குவதாயிற்று. ஆயினும், அத்தகைய உச்சரிப்புத் தொல்காப்பியர்காலத்து வழக்கன்று என்பதற்கு— 'ஏனைமூன்றுந் தத்தஞ் சார்பிற்பிறப்பொடு சிவணி... தம்மியல்பியலும்' என்று ஆசிரியர் வற்புறுத்துக்கூறுவதே தக்கசான்றாகும்.

## IV. புள்ளிபெறும் மகரக்குறுக்கம்.

தொல்காப்பியனார், மகரம் தன்மாத்திரையிற் குறுகிவருமிடத்தைக் குறித்துப் பின்—"உட்பெறு புள்ளி யுருவா கும்மே" என்று தனியே சூத்திரமொன்று கூறுகின்றார். இதற்கு, உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும்—மகரக்குறுக்கங்கூறிய மேற்சூத்திரத்திற்கண்ட மகரமே ஈண்டு அதிகாரப்பட்டு நின்றதாகக்கொண்டு 'பகரத்தோடு மகரத்திடை வரிவடிவு வேற்றுமைசெய்கின்றது இச்சூத்திரம்' என அவதாரிகையும், 'புறத்துப்பெறும் புள்ளியோடு உள்ளாற்பெறும்புள்ளி மகரத்துக்கு வடிவாம்' என்று பொருளும், புறத்துப்பெறும் புள்ளியாவது 'அடுத்துவருஞ் சூத்திரத்து மெய்கட்குக்கூறும் புள்ளி' என்று விசேடமுங் கூறுவர். இவற்றால், 'ப்' என்ற பகரவடிவின் உள்ளிடமாக 'ப்' என்று மற்றொரு புள்ளியையிடின் அது மகரத்தின் வடிவு என்பதைக் குறிக்கவந்ததே இச்சூத்திரம் என்று அவ்வுரையாளர்கருதியமை விளங்கும்.

இங்ஙனம் உரைகாரர் கருதினும், "உட்பெறு புள்ளி யுருவா கும்மே" என்று ஆசிரியர்கூறிய சந்தர்ப்பத்தை நோக்குமிடத்து, அச்

*பஃது என்பது—கஃதபதி என்பதிற்போலச்—சார்ந்த தகரத்தின் ஒலிபெற உச்சரிக்கப்பட்டதுபற்றியே, அவ்வாய்தம், தன்னோடு ஒலியாற் பெரிதுமொத்த தகரவொற்றின் தன்மையாய்ப் பத்து எனவும் ஆசிரியர்காலத்தே வழங்கலாயிற்றெனக். அஃதை (=அதனை) என்பதை அத்தை—என இக்காலத்தார் வழங்குவதுங் காண்க.

சூத்திரம், மகாத்தின் வடிவையன்றி, மகாக்குறுக்கத்தின் ஒருசார் உருவத்தையே குறிப்பதாதல் வேண்டும் என்பது, இப்போது 'தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ்' உதவிப்பதிப்பாசிரியராகவுள்ள என் நண்பர் ப்ருஹ்மஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியவர்களது (M. A., L. T.,) கொள்கை.* அவர்கள் அங்ஙனங் கருதற்குற்ற காரணம் அடியில் வருமாறு:—உட்பெறுபுள்ளி கூறும் இச்சூத்திரத்துக்கு முன்சூத்திரம்—

"அரையளவு குறுகன் மகர முடைத்தே
இசையிட னருகுந் தெரியுங் காலே"

என்பது. "வேறோர் எழுத்தினது ஓசையின்கண் மகரவொற்றுத் தன் அரைமாத்திரையிற் குறுகிச் சிறுபான்மையாக வரும்" என்பது இதன் பொருளாம். மெய்களும் சார்பிற்றோற்றத்து மூன்றும் அரைமாத்திரை பெறுதலும், அவற்றுள் மகரமெய்மட்டும் கால்மாத்திரைபெறுமாறு கூறி, அடுத்து 'உட்பெறு புள்ளி யுருவா கும்மே' என்று ஆசிரியர் முறையே குறித்தலால், முன் சூத்திரத்துவந்த மாத்திரைகுறுகிய மகரமே ஈண்டு அதிகாரப்பட்டதென்பதன்றிக் குறுகாத மகரமெய் அதிகாரப்பட்டதெனல் இயைபாதாகும். அன்றியும், மெய்களின்வடிவை 'மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்' எனப் பின்வருஞ் சூத்திரத்தால் ஆசிரியர்கூறுதலின், பகரத்தோடு மகாத்திடை வரிவடிவுவேற்றுமைசெய்தற்கு இச்சூத்திரம் முன்னின்றதென்பது பொருத்தமுமன்று. இவற்றால், அரைமாத்திரையவாகிய மெய்களும் சார்பெழுத்துக்களும் புள்ளிபெறுவன என்றுகூறியவாறே—ஈண்டு—மகரம் தன் அரைமாத்திரையிற் குறுகுமிடத்து ஒற்றுக்குரிய புறப்புள்ளியோடு, மகரச்சுழியினுள்ளாக மற்றொருபுள்ளியும் பெற்றுவரும் என்று ஆசிரியர் கூறினர் எனவுணர்க. குற்றிகர குற்றுகரங்கள்போல மகாக்குறுக்கமும் சிறப்புப்புள்ளிபெற்று முன்பு வழங்கிவந்ததென்பது, வீரசோழியஞ் சந்திப்படலத்து 19-ம் செய்யுளுள்—

"முன்வயிற்கால் வவ்வரின் - வருமொழிமுதல் வகரம்வந்து புணர்ந்தால், அந்த மகரமானது குறுகிக் கால்மாத்திரையாய் உட்புள்ளி பெறும்"

---

*The Bishop Heber College Magazine-என்றபத்திரிகையில் இவர்களால் எழுதப்பட்டுள்ள "தொல்காப்பிய ஆராய்ச்சி", 101, 102-ம் பக்கங்கள்,

என்று பெருந்தேவனார் எழுதும் உரைவிசேடம் ஈண்டு அறிந்து மகிழத்தக்கது. இப்பிரமாணவுண்மையும் சாஸ்திரியவர்களால் அன்புடன் எனக்கு அறிவிக்கப்பட்டதேயாம்.

## V. காலுக்குப்பிரதியாக வழங்கிய புள்ளி.

"புள்ளி யில்லா வெல்லா மெய்யும்
உருவுரு வாகி யகரமொ டுயிர்த்தலும்
ஏனை யுருவோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல வுயிர்த்த லாறே" (17)

என்ற சூத்திரத்தால், மெய்யும் உயிருங் கூடுமிடத்து, மெய்கள் வடிவு திரியாதுந் திரிந்தும் நிற்றலை ஆசிரியர் கூறுவர். இவற்றுள் திரிந்து நிற்கும் உயிர்மெய்களின் வடிவுகளைக் குறிக்குங்கால், நச்சினார்க்கினியர்—

"உருவுதிரிந்துயிர்த்தலாவது—மேலுங் கீழும் விலங்குபெற்றும் கோடு பெற்றும் புள்ளிபெற்றும் புள்ளியுங் கோடும் உடன்பெற்றும் உயிர்த்தலாம். கி, கீ முதலியன மேல்விலங்கு பெற்றன. கு, கூ முதலியன கீழ்விலங்குபெற்றன. கெ, கே முதலியன கோடுபெற்றன. கா, ஙா முதலியன புள்ளிபெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினர். கொ, கோ, ஙொ, ஙோ முதலியன புள்ளியுங் கோடும் உடன்பெற்றன.

என்று குறிப்பிடுகின்றார். இவற்றால் கா, ஙோ என்பவற்றின் அருகிலுள்ள கால்கள் முற்காலத்தே புள்ளிகளாக எழுதப்பட்டன என்பது அவ்வுரைகாரர்கருத்தாதல் விளங்கும். இம்முறையைச் சாஸனங்களிலேனும், வேறு பழம்பிரதிகளிலேனும் காண்டல் அரிதேயாம். ஆயினும், தண்டியலங்காரத்தில் மாத்திரைச்சுருக்கத்துக்குக் 'காட்டப்பட்ட வெண்பாவொன்று, இத்தகைய வழக்குண்மையைக் குறிப்பிடுவதாகவே தோற்றுகின்றது. அது வருமாறு:—

"நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமாம்
நீர்நிலையோர் புள்ளி பெறநெருப்பாம்—சீரளவும்
காட்டொன் றொழிப்ப விசையா மதனளவு
மீட்டொன் றொழிப்ப மிடறு" என்பது.

'மகளிர் கூந்தற்பெயரான 'ஓதி' என்பதனுட் புள்ளியிடின் 'ஒதி' என்றாகி மரமொன்றனைக் குறிக்கும். நீர்நிலையின் பெயரான 'ஏரி' என்பதனுட் புள்ளியிடின் 'எரி' என்றாகி நெருப்பைக்குறிக்கும். காட்டின்

பெயரான காந்தாரம் என்பதில் ஒன்றைக் குறைக்கக் கந்தாரம் என்றாகிப் பண்ணைக் குறிக்கும். அக்கந்தாரச் சொல்லினும் ஒன்றைக் குறைக்கக் கந்தரம் என்றாகி மிடற்றைக்குறிக்கும் என்பது, இப்பாட்டின் பொருள். இதன்கண், 'காட்டொன்றொழிப்ப' 'மீட்டொன்றொழிப்ப' என்பவற்றிலுள்ள 'ஒன்று' என்பது, 'புள்ளிபெற' என மேல்வருந் தொடர்கள்கொண்டு அப்புள்ளியினையே குறிப்பதென்றும், அதனால் 'ஒன்றொழிப்ப' என்பதற்குப் 'புள்ளியைக் குறைக்க' என்பது பொருளாமென்றுங் கொள்ளத்தக்கன. இவ்வாறன்றி, ஒருசார் உயிர்மெய்களின் குறியாக இடப்படும் காலை (ா) யே 'ஒன்று' என்ற சொற்கள் குறிக்க வந்ததாகக் கொள்ளுதல் ஏற்புடைத்தன்று. அதுவே கருத்தாயின், 'கூந்தலினோர் புள்ளிபெற' 'நீர்நிலையோர் புள்ளிபெற' என்று மேற்கூறினாற்போலவே-'காட்டிலோர் காலொழிய' 'மீட்டுமோர் காலொழிய'-என்றவாறு, இன்னதொழிய என்பது விளங்கப் பாடப்பட்டிருக்கும். அங்ஙனமின்மைபால், ஒன்றென்பன புள்ளியையன்றி வேறுகுறிக்குமெனல் இயையாதென்க. எனவே, புள்ளியைக்கூட்டுவதாலும், அதனைக்குறைத்தலாலும் எழுத்தளவு சுருங்கிவரும் 'மாத்திரைச்சுருக்கம்' என்ற சொல்லணியின் இருவேறுவகைக்கும் உதாரணங்கள்கூறவந்ததே இவ்வெண்பா என்பது நன்கு பெறப்படும். க.ந்த.ரம் என்றவாறு முன்பு எழுதப்பட்டுவந்தபுள்ளியே பிற்காலத்துக் காந்தாரம்என்றவாறு காலாக மாறியது என்று எழுதிய நச்சினார்க்கினியர்கூற்றை, இவ்வாறு பழைய பாடலொன்று ஆதரித்துநிற்றல் கண்டுகொள்க. *

## VI. புள்ளிபெறும் வேறெழுத்துக்கள்.

'தொல்லை வடிவின வெல்லா வெழுத்தும்,' என்ற நன்னூற்சூத்திரத்துக்குப் பழையவுரைகாரரான மயிலைநாதர் எழுதிய விசேடவுரை அடியில்வருமாறு:—

''ஆண்டு' என்ற மிகையானே, தாதா, ஏதா என்றற்றொடக்கத்து ஆரிய மொழிகளும், எட்டு, கொட்டு என்றற்றொடக்கத்துப் பொதுமொழிகளும், குன்றியாது, நாடியாது, எட்டியாண்டுளது என்றற்றொடக்கத்துப் புணர்மொழிகளும் பொருள்வேறுபாடு அறிதற்பொருட்டுக் குற்றுகர குற்றிகரங்கட்குமேல் புள்ளிகொடுப்பாரும் உளரெனக்கொள்க'' எனக் காண்க.

---

*சாஸனங்களில் கால்கள், என்றவாறு காணப்படும். புள்ளிவரையும்போது, சிலசமயங்களில் அது கோடாக அமைவதும் கூடியதேயாம்.

இவ் விசேடவுரையால் ஆரியமொழியான தாது இந்து முதலியன குற்றுகரமேயாயினும் உயிர்வரின் மெய்விட்டோடல் முதலிய செய்கை பெறும் இயல்புபெறுமையின் அத்தகைய ஆரியமொழிகளின் வேறுபாடு விளங்கவும்*பொதுமொழி புணர்மொழிகளில் நேரும் பொருட்டடுமாற்றத்தை அகற்றவும், அவற்றுக்குப் பண்டையோர் புள்ளியிட்டுவந்த செய்தி தெரியலாம். இவையன்றி, தவறாக எழுதப்பட்டவற்றை நீக்கிப் படிப்பதற்கு அறிகுறியாக அத்தவற்றெழுத்துக்களின்கீழே புள்ளிக ளிட்டுக்காட்டும் வழக்கம் ஏட்டுச்சுவடிகளிற் பெரிதும் காணப்படும். இவ்வாறு காட்டுவது தொன்றுதொட்டமுறையே என்பது,—"எழுத்து உருவழியாதே கிடந்தாலும், புள்ளிகுத்தினால் அத்தைக்கழித்து மேலே போமாபோலே" எனவரும் திருவாய்மொழி ஈட்டின் பந்தியாலுந் தெரியலாம். எனவே, எழுத்தின் மாத்திரையைக் குறைத்தற்குமட்டுமன்றி, அவ்வெழுத்தையே குறைத்தற்குக் குறியாகவும் புள்ளியை முன்னோர் உபயோகித்துள்ளமை புலப்படும்.

இதுவரை கூறியவற்றால், எழுத்துக்களின் வரிவடிவுகளை நன்கு விளக்காது, அவை பழையமுறையே வழங்குவன என்று குறிப்பிட்டு, அவற்றுட் புள்ளிபெறுவனவற்றை மட்டும் தொல்காப்பியரும் பிறரும் விதந்தோதுவது நன்குவிளங்கும்: சொல்லினுந் தொடரினுந் தெளிவான பொருளுணர்ச்சியுண்டாதற்பொருட்டு ஆசிரியர்கள் இங்ஙனம் புள்ளிவிதித்துப்போந்ததைப் பின்னோர் நெகிழவிட்டவிடங்களில், பிழைச்சொற்களும் பொருட்டிரிவுணர்ச்சியும் நிகழலாயிற்றென்றே சொல்லலாம்: கன்மாப்பலகை - கனமாப்பலகை (சங்கப்பலகை) 'கள்வன் - களவன் (நண்டு), நேர்திறம்-நோதிறம் (பண்வகை), சாகம்-சரகம் (தேனீ) முதலாகச் சொற்களின் உண்மையுருவந்தெளியப்படாமைக்கெல்லாம், இப்புள்ளியிடுவதில் நேர்ந்த சோர்வே, காரணமன்றோ? இதற்கு இன்னும் எத்தனையோ உதாரணங்கள் உள்ளன: அவற்றை விரிப்பிற் பெருகும். இங்ஙனம் தமிழ்வரம்பு சிதையாமைப்பொருட்டு முன்னோர் கையாண்ட இப்புள்ளியிடுமுறை, நம்மனோரால் பெரிதும் போற்றத்தக்கதாம் என்க.

மு. இராகவையங்கார்.

---

* இதனால் செய்கைபெறும் குற்றுகரங்கட்குப் புள்ளியிடும்வழக்கு இவ்வுரைகாரர்காலத்தில் இல்லை என்பதும் பெறப்படும்.

ஸ்ரீ:

# கொண்கான நன்னனுடைய ஊர்களும் மலைகளும்.

'கொண்கானநாட்டு நன்னனும், அவனுடைய ஊர்களும் மலைகளும்' என்னும் வியாசத்தின் முதற்பாகமான 'கொண்கானத்து நன்னன்' என்னும் விஷயம், சென்ற புரட்டாசிமாசத்துச் செந்தமிழில் வெளி வந்துளது. இரண்டாவதுபாகமாகிய இதில், அகநானூற்றில், நன்னனுக்கு உரியதாகச்சொல்லப்பட்ட மூன்று ஊர்களைப் பற்றியும் மூன்று மலைகளைப் பற்றியும் எழுதலாயிற்று.

## A. ஊர்கள்,

### 1 பாரம்.

'பாரத்துத் தலைவ னார நன்னன்' என்று அகம்-152ல் வந்திருப்பதால் இவ்வூர் ஒரு காலத்தில் நன்னனுக்கு உரியதாயிருந்ததென்று தெரிகிறது.

"வீளை யம்பின் வில்லோர் பெருமகன்
பூந்தோள் யாப்பின் மிஞிலி காக்கும்
பாரத் தன்ன"

என்று நற்றிணை 265ல் வந்திருந்தாலும், அகநானூற்றிற் காணப்படும் நன்னன்விருத்தாந்தங்களிலிருந்து மிஞிலியென்பவன் நன்னனின்சேனாபதியென்று ஊகிக்கப்படுகிறபடியால், சேனாபதிநிலைமையிற் பாரத்தை மிஞிலி, நன்னனுக்காகக் காத்தானென்று கொள்க.

### 2 பாழி (நகரம்).

'பாழி யன்ன கடியுடை வியனகர்' (அகம் 15) என்றும், 'அருங்கடிப் பாழி' (அகம்-258) என்றும், 'செம்புறழ் புரிசைப் பாழி' (அகம் 375) என்றும் வந்திருப்பதால் இஃது அரணும் காவலு முடையதா யிருந்ததென்று தெரிகிறது.

'யாழிசைமறுகிற் பாழியாங்கண்' (அகம் 396) என்று வந்திருப்பதால், பாழி பெரியநகாமென்றும் அதன் வீதிகளில் ஆடல் பாடல் முதலிய கோலாகலங்க ளுண்டென்றும் தெரிகிறது.

'சூழி யானைச் சுடர்ப்பூ ணன்னன், பாழி யன்ன கடியுடை வியனகர்' (அகம்-15) என்றும், 'நன்ன னுதிய னருங்கடிப் பாழி' (அகம்-258) என்றும், 'பொலம்பூ ணன்னன்—யாழிசை மறுகிற் பாழி யாங்கண் (அகம்-396) என்றும், 'கறையடி யானை நன்னன் பாழி' (அகம்-142) என்றும், 'பாரத்துத் தலைவ னார நன்னன், ஏழில் நெடு வரைப் பாழி' (அகம்-152) என்றும் வந்திருப்பதால், பாழி, நன்ன னுடைய ராஜதானியாயிருந்திருக்கலாமென்று தோன்றுகிறது.

(a) 'நன்ன னுதிய னருங்கடிப் பாழித், தொன்முதிர் வேளி ரோம்பினர் வைத்த, பொன்னினும் அருமை' (அகம்-258) என்றும், 'பாழி யாங்கண், வேண்முது மாக்கள் வியனகர்க் கரந்த, அருங்கல வெறுக்கையின்' (அகம்-372) என்றும் வந்திருப்பதால், ஏழினெடு வரைச் சுரங்கத்திலிருந்து (அகம்-173 & நற். 391) நன்னனின் முன் னோர்களால் எடுக்கப்பட்டு, அவர்களால் வியனகரி லோம்பிக் கரந்து வைக்கப்பட்டிருந்த பொன், பரம்பரையாய்க் காக்கப்பட்டுவந்ததென்று தெரிகிறது. 'அருந்தெறன்—மரபிற், கடவுள்காப்ப' (அகம்-372) என்றதும் இத்திரவியத்தையே போலும். 'அருங்கடிப்பாழி' என்றதும் இத்திரவியத்துக்காகவேபோலும்!

(b) " ... ... ... சோழர் பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த இளம்பெருஞ் சென்னி
குடிக்கட னாகலிற் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் பாழி நூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டி" (அகம்-375)

என்பதால் இளம்பெருஞ்சென்னியென்னும் சோழன் பாழிமதிலை யிடித்து அதிலிருந்த வம்பவடுகரை அழித்தானென்று தெரிகிறது.

c. அகம் 142-208-396 முதலியவற்றிலிருந்து பாழிப்பறந் தலையில் நன்னன்சேனைபதி மிஞிலியென்பான், அதிகனாகிய ஆயெயி னனைக் கொன்றானாக, அவனுடைய பிரேதத்தை ஆந்தையொழிந்த

மற்றப்பறவைகள் வெயிற்படாமல் மறைத்துச் சத்தம்போட, அதைக் கேட்டுச் சினமிகுந்த நன்னன் அப்பிரேதத்தை மறைத்துவைக்க, எயினன்மனைவியர் அதற்கு வருந்த, அவர்கள் வருத்தத்தை அஃதை யென்னும்தலைவன் (பிரேதத்தைக்கவர்ந்து அவர்கையிற்கொடுத்து) நீக்கினான் என்று தெரிகிறது.

3. வாகைப்பெருந்துறை.

a. " ... ... ... ... குடாஅது,
இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவிற்
பொலம்பூ ணன்னன் பொருதுகளத் தொழிய
வலம்படு கொற்றந் தந்த வாய்வாட்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேர
லிழந்த நாடு தந்தன்ன
வளம்பெரிது பெறினும் வாரல னியானே"

(அகம் 199 கல்லாடனார்.)

இதிலிருந்து, இவ்வூர்ச்சண்டையிற் களங்காய்க் கண்ணிநார்முடிச் சேரலென்பான், நன்னனைத்தொலைத்துத் தானிழந்த நாட்டைக் கைப்பற்றினானென்று தெரிகிறது.

b. "விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகான் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை யாடுபெற
வொன்பது குடையு நன்பக லொழித்த
பீடின் மன்னர் போல
வோடுவை மன்னால்! வாடைநீ யெமக்கே"

(அகம் 125: பரணர்.)

பிரிவுக்காலத்தில் தலைவியை வருத்திக்கொண்டிருந்த வாடை நாயகன்வந்தவுடன் புறங்கொடுத்து ஓடுதலுக்கு உவமானமாக, வாகைப் பறந்தலையிற் கரிகாற்பெருவளவன்முன் ஒன்பதுமன்னரும் புறங்கொடுத்தோடியது கூறப்பட்டிருக்கிறது.

இவ்வாகைப்பறந்தலை, மேற்சொன்ன (வாகைப்) பெருந்துறை தானோ அன்றோ, நிச்சயமாய்த் தெரியவில்லை.

['பூழிநாட்டைப் படையெடுத்துத் தழீஇ, யுருள்பூங்கடம் பின் பெருவாயி னன்னனை, நிலைச்செருவினாற்றலையறுத்தவன், பொன்படு வாகை முழுமுதறடிந்து' எனப் பதிற்றுப்பத்து நான்காம்பத்தின் பதிகக்காரர், பூழிநாடும் (கடம்பின்) பெருவாயிலென்னும் ஊரும் நன்னனுக்குரியதாகக்கொண்டார்.]

## B. மலைகள்.

### 1. ஏழிற்குன்றம்.

a. 'பொன்படு கொண்கான நன்ன னன்னாட்
டேழிற் குன்றம் பெறினும் பொருள்வயின்
யாரோ பிரிகிற் பவரே' (ந–391.)

இதிலிருந்து ஏழிற்குன்றத்திற் பொற்சுரங்கமிருந்த தென்று தெரிகிறது.

"இன்களி நறவி னியறேர் நன்னன்
விண்பொரு நெடுவரைக் கவா அற்
பொன்படு மருங்கின் மலையிறந் தோரே" (அ–173)

என்பதையும் காண்க.

['நன்ன னேழினெடுவரை' (அ–152) என்றும், 'நன்னன் நன்னாட் டேழிற்குன்றத்து' (அ–349) என்றும், வந்திருப்பதால் ஏழிற் குன்றம் நன்னனுக்குரியதாயிருந்தது என்று தெரிகிறது. மேற் குறித்த செய்யுள்களையும் நோக்குக.]

b. ' ... ... ... ... ஓங்குபுகழ்க்
கானமர் செல்வி யருளலின் வெண்காற்
பல்படைப் புரவி யெய்திய தொல்லிசை
நுணங்குநுண் பனுவற் புலவன் பாடிய
வினமழை தவழு மேழிற் குன்றம்' (அ–345.)

என்னும் செய்யுளால், கொற்றவையாகிய வனதுர்க்கையின் அருளால் வெளிய கால்களையுடைய பலகுதிரைகளைப்பெற்ற ஒரு பெரும்புலவனால் ஏழிற்குன்றம் பாடப்பட்டதென்று தெரிகிறது.

*cf.* 1. 'இனமழை தவழு மேழிற் குன்றத்துக்
கருங்கால் வேங்கைச் செம்பூம் பிணையல்
ஐதேந் தல்குல் யாமணிந் துவக்கும்' (அ–345)

2. '... ... ... ... நன்னனன்னாட்
டேழிற் குன்றத்துக் கவாஅற் கேழ்கொளத்
திருந்தரை நிவந்த கருங்கால் வேங்கை
எரிமருள் கவள மாந்திக் களிறுதன்
வரிநுதல் வைத்த வலிதேம்பு தடக்கை
கல்லூர் பாம்பிற் றோன்றுஞ்
சொல்பெயர் தேஎத்த சுரனிறந் தோரே' (அ–349)

இவற்றில் முதற்செய்யுளிலிருந்து ஏழிற்குன்றத்து வேங்கைச் செம்பூந்தழை, அணிந்துகொள்வதற்குச் சிறந்ததாக, ஸ்த்ரீகளால் மதிக்கப்பட்டிருந்ததென்று தெரிகிறது.

இரண்டாவது செய்யுளிலிருந்து, ஏழிற்குன்றத்திற் செழிப்பாய் வளர்ந்த செம்பூப்பூத்த வேங்கைமரத்துக் கிளைகளையும் தழைகளையும் யானை, பிரியமாய்த் தின்னுமென்றும் யானையாற் றன் நெற்றியில் வைக்கப்பட்ட துதிக்கை பாறைகளிலூரும் பாம்புபோற் றோன்று மென்றும் அந்நாட்டில் தமிழல்லாத ஒருபாஷை அக்காலத்தில் வழங்கிற் றென்றும் தெரியவருகிறது.

இன்னும் அவ்வேழிற்குன்று பின்வருமாறும் வருணிக்கப்படு கிறது.

'புலிப்பொறி யன்ன புள்ளியம் பொதும்பிற்
பனிப்பவர் மேய்ந்த மாயிரு மருப்பின்
மலர்தலைக் காரா னகற்றிய தண்ணடை
யொண்டொடி மகளி ரிழையணிக் கூட்டும்
பொன்படு கொண்கான நன்ன னன்னாட்

டேழிற் குன்றம் பெறினும்
பொருள்வயின் யாரோ பிரிகிற் பவரே' (நற்-391)

மாயிரு மருப்பின் மலர்தலைக், காரான், பனிப்பவர் மேய்ந்து தின்றதுபோகத் தின்றுவிட்ட தண்ணடைகளை, ஒண்டொடி மகளிரிழைபணிக்கு உபயோகப்படுத்தும் எழிற்குன்றமென்க†.

2. பாழி (ச்சிலம்பு)

a. ' ... ... ... ... ஆஅ நன்னன்
ஏழி னெடுவரைப் பாழிச் சிலம்பிற்
களிமயிற் கலாவத் தன்ன' (அ-152)

என்பதால் பாழிச்சிலம்பு ஏழினெடுவரையைச்சேர்ந்ததென்றும் அங்கு அழகிய கலாவத்தையுடைய மயில்கள் மிகுதி என்றும் தெரிகிறது.

b. 'அருந்தெறன் மரபிற் கடவுள் காப்பப்
பெருந்தேன் றூங்கு நாடுகா ணனந்தலை
யணங்குடை வரைப்பிற் பாழி யாங்கண்' (அ-372)

என்பதால் பெருந்தேன் கடவுள் காப்பத் தூங்குமென்றும் பாழியில் ஒரு தெய்வம் (கானமர்செல்வி?) கோவில்கொண் டெழுந்தருளியிருந்ததென்றும், தெரிகிறது, (மற்றவைகட்குப் பாழி, நகரத்தைப் பற்றிய குறிப்புகளைப்பார்க்க).

3. பறம்பு.

' .... .... .... .... ஊரன்
இடைநெடுந் தெருவிற் கதுமெனக் கண்டென்
பொற்றொடி முன்கை பற்றின னாக
அன்னாய்! என்றனென் அவன்கை விட்டனனே

† 'ஈரியகொடியை மேய்ந்த நெடிய கரிய கொம்பையும் பருத்த தலையையுமுடைய எருமைமாடு அக்கொடியினின்று தின்றொழிந்த மலைப்பச்சையின் இலைகளை ஒள்ளிய தொடியையுடைய மகளிர் கலன்களையணிவதற்குப் பயன்படுமாறு கூட்டாநிற்கும்' என்று பொருள் எழுதினர் பின்னத்தூர் நாராயணசாமிஐயரவர்கள். தின்றொழிந்த இலைகள் எவ்வாறு கலனணியப் பயன்படும்? அவர்கள்கருத்துத் தெளிவாய் விளங்கவில்லை.

தொன்னசை சாலாமை நன்னன் பறம்பிற்
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போல் நாவினே னாகி‡மற்றது
செப்பலென் மன்னல் யாய்க்கே.' (பாணர்—அ-356.)

இது தலைவிகூற்று 'தலைவன் தெருவிடையில் என்னைக் கண்டு, திடீரென்று கையைப்பிடித்தான் உடனே நான் அம்மா! என்று கூப்பிட்டேன். கூப்பிட்டதும் அவன் என் கையை விட்டுவிட்டான், நன்னன்பறம்பிற் சிறுகாரோடனால் அரக்கோடு சேர்க்கப்பட்ட கல் எப்படி அசைக்கமுடியாமலிருக்குமோ, அப்படி மேற்சொல்ல அசைந்தெழாத நாவையுடையேனாய் (மேற்சொல்ல இஷ்டமில்லாமல் நாவை யடக்கிக்கொண்டு) மற்றவற்றை யாய்க்குத் தெரியப்படுத்தாம லிருந்துவிட்டேன் என்பது இச்செய்யுளின்கருத்து.

சிறுகாரோடன் பயினொடு சேர்த்திய கல் எத்தகையதென்று இக்காலத்தில் விளங்கவில்லை.

வித்வான்—ஆ. மா. சடகோபராமாநுஜாசாரியன்,
Lecturer in Tamil & Dravidam philology,
Govt. College,
கும்பகோணம்.

---

‡'வண்டுபடத் ததைந்த கண்ணி யொண்கழல்
உருவக் குதிரை மழவ ரோட்டிய
முருக னற்போர் நெடுவேள் ஆவி
யறுகோட் டியானைப் பொதினி யாங்கட்
சிறுகா ரோடன் பயினொடு சேர்த்திய
கற்போற் பிரியலம் என்ற சொல்தாம்
மறந்தனர் கொல்லோ! தோழி' (மாமூலனார்—அ-1.)

'காரோடன்=பணையான். பயின்=அரக்கு. கல்=சாணை. அரக்குங் கல்லும் கூட்டிச் செய்த கல்லை வேறுபிரிக்கவொண்ணாதென்று கற்போற் பிரியலம் என்றார்' என்பது பழையவுரை.

## மதிப்புரை.

ஜகன்மோகினி—இது திருவல்லிக்கேணியில் வை. மு. கோதை நாயகியம்மாள் பத்திராசிரியராயிருந்து வெளியிட்டுவரும் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதன் நான்காந்தொகுதியின் 1, 2, 3, பகுதிகள் வந்தன. இவற்றுள் 'பத்மசுந்தரன்' என்னும் துப்பறியும் நாவலும் பிறவிஷயங்களும் யாவரும் படித்தற்கேற்றவாறு விளக்கமாக எழுதப்படுகின்றன. இதன் வருடச்சந்தா ரூபா. 1-8-0 தனிப்பிரதி அணா 3. வேண்டுவோர் ஜகன்மோகினி ஆபீஸ் 26 தோடித்தெரு திருவல்லிக்கேணி மதராஸ் என்ற விலாசத்திற் பெறலாம்.

செங்குந்தமித்திரன்—இது செங்குந்தமரபினர்களின் முன்னேற்றங்கருதியநன்னோக்கங்களை வெளிப்படுத்துவதற்கும், அவற்றை அவர்கள் முடிப்பதற்குத் துணைசெய்வதற்குமாகத் தொடங்கப்பெற்றதொரு மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை. இதன் முதலாவது பகுதி வெளிவந்திருக்கிறது. இதில் கதரின்கட்டுரை முதலிய உரியவிஷயங்கள் வெளிவருமென்றுதோன்றுகின்றது. இதன் வருடச்சந்தா ரூ. 1-8-0 வேண்டுவோர் செங்குந்தமித்திரன் ஆபீஸ் 31 அரண்மனைக்காரத்தெரு சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

---

## அநுதாபக்குறிப்பு.

நிகழும் அக்ஷயவருஷம் பங்குனிமீ 14உ ஞாயிற்றுக்கிழமை பகல் 4 மணிக்கு சேற்றூர் ஸமஸ்தானவித்வத்குடும்பத்தவரும், திருவாவடுதுறைஆதீனவித்வானும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் நூற்பரிசோதகருமான ஸ்ரீமத் சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் காலம் சென்றுவிட்டதுபற்றி மிகவும் அநுதாபமடைகிறோம். அவர் இரண்டு வருஷ காலங்களாகவே நீரிழிவுரோகத்தாற் பீடிக்கப்பட்டிருந்தும் அதைப் பொருட்படுத்தாமலே தமிழ்நூற்பரிசோதனையிலிருந்து தமிழுக்கு உழைத்துக்கொண்டிருந்தார். அவர் தமிழிலக்கியஇலக்கணநூல்களில் நிரம்பியபயிற்சியுடையராயிருந்ததுமன்றிச் சைவசமயசாத்திரங்களிலும் வல்லவர். தீக்ஷைபெற்றுச் சிவபூஜை முதலியசெய்யும் சமயவொழுக்கங்களிலும் சிறந்தவர். ஞானாமிருதம், சைவமஞ்சரி, தமிழ்ச்சொல்லகராதி வில்லிபாரதமுதலியதமிழ்நூல்கள் பரிசோதித் தச்சிட்டிருப்பதோடு செந்தமிழி விடையிடையே சில சிறந்த வியாசங்களும் எழுதி வெளியிட்டும் தமிழ்ச்சங்கத்தார் நடத்திவரும் தனித்தமிழ்ப்பரீக்ஷைப் பரீக்ஷகராகவிருந்தும் தமிழ்க்குழைத்துவந்தவர். இவருடையபிரிவு பற்றியபரிவு தமிழ்ச்சங்கத்தாராலும் தமிழ்மக்களாலும் பாராட்டத் தக்கது. இவரை இழந்து வருந்தும் அவர்குடும்பத்தார்க்கு நம்மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

---